

சென்னை, அயனாவரத்தில் சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி திமுக சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு பொதுக் கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்திற்கு முன்னிலையேற்ற அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், சி.பி.எம். கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் கே.பாலபாரதி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஆளூர் ஷாநவாஸ், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு தலைவர் .ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி கழக செயலாளர் வாசு, கழக மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வேதாரண்யம் வட்டம் - வேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான

# 2122.10 ஏக்கர் நிலங்களுக்கு திருக்கோயில் பெயரில் பட்டா!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜுன் 15-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகளும், நிலவுடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்ட நடவடிக்கையின் போது தவறுதலாக பட்டா மாற்றம் செய்யப்பட்ட இனங்கள் மற்றும் வருவாய்த்துறையில் கணினி சிட்டா தயாரிக்கும் போது தவறுதலான பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட இனங்கள் குறித்து சம்பந்தப் பட்ட திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் மாவட்ட வருவாய் நிர்வாகத்திடம் மேல்முறையீடு செய்து அவற்றை மீட்கும் பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம், வேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான அகஸ்தியம் பள்ளி கிராமத்தைச் சேர்ந்த 2122.10 ஏக்கர் நிலங்களுக்கு திருக்கோயில் பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்ற 07.05.2021 முதல் 31.05.2023 வரை திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.4,505 கோடி மதிப்பீட்டிலான 4,802 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு ள்ளன. நிலவுடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத் தவறினால் பட்டா மாற்றம் செய்யப்பட்ட இனங்களில் 1771.17 ஏக்கர் நிலங்களும், கணினி சிட்டா தயாரிப்பில் தவறான இனங்களில் 2541.26 ஏக்கர் நிலங்களும் மேல் முறையீட்டின் மூலம் மீட்கப்பட்டுள்ளன. மேலும் திருக்கோயில் நிலங்களை அளவீடு செய்யும் பணிகளில் இதுவரை 1,16,886 ஏக்கர் நிலங்கள் அளவிடப்பட்டு, எல்லை கற்கள் நடப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் ஆகியோரால் பாடல் பெற்ற தலமாகவும், சப்த விடங்கத் தலங்களில் ஒன்றாகவும் விளங்குகின்ற வேதாரண்யம், வேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான அகஸ்தியம் பள்ளி கிராமத்தி லுள்ள நிலங்கள் வேதாரண்யேஸ்வரர் சுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான சர்வமான்ய நிலங்கள் எனவும், அந்நிலங்கள் உப்பு நிறு வனத்தின் (Salt Corporation) அனுபவத்தில் உள்ளதாகவும், அந்நிலங்களுக்கு உப்பு நிறுவனம் குத்தகை தொ கையினை திருக்கோயிலுக்கு வழங்கி வருவதாகவும், அந்நிலங்களை சர்வே செய்து திருக்கோயில் பெயரில் பட்டா வழங்கிட சென்னை உதவி நிலவரித்திட்ட (வடக்கு) அலுவலர் நீதிமன்றத்தில் அத்திருக்கோயில் செயல் அலுவலர்களால் 2006ம் ஆண்டு முதல் தொடர்ந்து முறையீடு செய்யப்பட்டு வந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்நிகழ்வில் சிறப்பு கவனம் செலுத்தி துரித நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரைகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து இவ்வழக்கில் துறையின் மூலம் பணிகள் விரைவு படுத்தப்பட்டன.

அதனடிப்படையில் திருக்கோயில் நிர்வாகத்தால் தொடரப்பட்ட வழக்கில் வேதாரண்யம் வட்டம், அகஸ்தியம் பள்ளி கிராமத் தில் புல எண்.284க்கு கட்டுப்பட்ட 2122.10 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலங்களுக்கு தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963 பிரிவு 8(2) (ii)ன் படி வேதாரண்யேஸ்வரர் சுவாமி தேவஸ்தானம் பட்டா பெற முழு தகுதி உடையவராகிறார் என சென்னை உதவி நிலவரித்திட்ட (வடக்கு) அலுவலரால் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் இந்து சமய அறநிலையத்துறையின் நீண்ட கால சட்டப் போராட்டங்களுக்கு பின்னர் இத்தீர்ப்பு திருக்கோயிலுக்குச் சாதகமாக கிடைக்க ப் பெற்றுள்ளது. இத்தீர்ப்பின் அடிப்படையில் இந் நிலங்களுக்கு பட்டா பெற நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியருக்கு திருக்கோயில் செயல் அலுவலரால் விண்ண ப் பிக்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு திருக்கோ யிலுக்கு சொந்தமான 2122.10 ஏக்கர் நிலங்களுக்கு திருக்கோ யில் பெயரிலேயே பட்டா பெறப் பட்டுள்ளது. மேலும், வேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இதர நிலங்க ளுக்கும் திருக்கோயில் பெயரிலேயே பட்டா பெறுவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

ஒட்டுமொத்தமாக, திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எங்கிருந்தாலும் அவற்றை கண்டறிந்து அத்திருக்கோயிலுக்கு ஒப்படைக்கும் பணிகளில் இந்த அரசும், இந்து சமய அறநிலையத் துறையும் உறு துணையாய் செயலாற்றும் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

## நைஜீரியாவில் படகு கவிழ்ந்து 103 பேர் பலி!

அபுஜா, ஜுன் 15 -

நைஜீரியாவின் வடக்கே நைஜர் மாகாணத்தில் உள்ள எக்போடி கிராமத்தில் திருமண நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து பலர் இதில் பங்கேற்றனர். திருமணம் முடிந்து 300க்கும் மேற்பட்டோர் ஒரு படகில் திரும்பிக் கொண்டிருந்தனர்.

மேலும் பலர் படகில் தங்களது பைக்குகளை எடுத்து வந்திருந்தனர். அப்போது அதிக பளு காரணமாக படகு திடீரென ஆற்றில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் சிறுவர்கள் உள்பட 103 பேர் பரிதாபமாக பலியாகினர். அதிகாலை 3 மணியளவில் இந்த விபத்து நடந்தது.

தகவலறிந்து வந்த மீட்புக் குழுவினர் 100க்கு மேற்பட்டோரை மீட்டுள்ளனர். மேலும், மாயமான பலரை தேடி வருகின்றனர்.

திருமணத்துக்குச் சென்றுவிட்டு ஊர் திரும்பிய மக்கள் படகு கவிழ்ந்த விபத்தில் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்களை பாட்னாவில் அவரது இல்லத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா சந்தித்து திருவாரூர் மாவட்டம் காட்டூரில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கோட்டம் திறப்பு விழா அழைப்பிதழை வழங்கினார்.



பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் அவர்களை பாட்னாவில் அவரது இல்லத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா அவர்கள் சந்தித்து திருவாரூர் மாவட்டம் காட்டூரில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கோட்டம் திறப்பு விழா அழைப்பிதழை வழங்கினார்.


வாய்மையே வெல்லும்

கலைஞர் 100 1924 - 2023





கலைஞர் நூற்றாண்டு
உயர் சிறப்பு மருத்துவமனை திறப்பு விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
1000 படுக்கை வசதிகள் கொண்ட
கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை
திறந்து வைத்து விழாப் பேருரையாற்றுவார்கள்

முன்னிலை

திரு. எ.வ. வேலு அவர்கள்
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்
மாண்புமிகு மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

இவ்விழாவில்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் பங்கேற்று சிறப்பிப்பார்கள்




நாள் : 15.6.2023, வியாழக்கிழமை, மாலை 6.00 மணி
இடம் : கிங் ஆராய்ச்சி நிலைய வளாகம், கிண்டி, சென்னை

அனைவரும் வருக !

முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்

செ.ம.தொ.இ./646/வரைகலை/2023

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009